# OUR LADY OF GOOD HEALTH PARISH
# தூய ஆரோக்கிய அன்னைப் பங்கு

**131 Birchmount Road, Scarborough, ON M1N 3J7**
416-264-OLGH (6544) : **Phone**
416-264-6545 : **Fax**
office@olghtamilparish.com : **Email**
www.olghtamilparish.com : **Website**


**04/18/2021**



என் அன்பான தூய ஆரோக்கிய அன்னை பங்கு மக்களே,

உங்கள் அனைவரையும் செபத்தோடு கூடிய வாழ்த்துக்களும் ஆசிகளும் கூறி, இந்த அன்பு மடல் மூலம் தொடர்பு கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கோவிட்-19 நோய் பரவல் மற்றும் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வேகமான எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக, ஒன்ராரியோ அரசு மாகாணம் முழுவதையும் மறு அறிவித்தல் வரை முடக்க நிலைக்குக் கொண்டுவந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒன்ராரியோ மாநிலத்தில் வேகமாக அதிகரித்துச் செல்வதனால், இதுவரை நடப்பில் இருந்த மட்டுப்படுத்தப்பட்ட வகையிலான நடமாட்டங்கள், **STAY-AT-HOME**, அதாவது வீட்டிலேயே இருங்கள் என்ற உச்சநிலை எச்சரிக்கை நிலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், மேலதிகமாக அவசிய காரணங்கள் இருந்தாலன்றி, வீதியில் இறங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ரொறன்ரோ மறைமாவட்டம், ஆலய வழிபாடுகளுக்கான அதிகபட்ச எண்ணிக்கையை, ஒரு நேரத்தில் குருக்கள் மற்றும் ஆலய பணியாளர்கள் உட்பட, ஆகக்கூடியது 10 பேர் மட்டுமே என்ற நிலைக்குக் கொண்டுவந்துள்ளது.

எனவே, சித்திரை 19, திங்கட்கிழமையிலிருந்து எமது ஆலயத்தில் பொதுமக்களுக்கான திருப்பலி வழிபாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமை காலை 9:00 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலியும், காலை 10:30க்கு தமிழில் திருப்பலியும் வழமைபோன்று, எமது ஆலயத்திலிருந்து வலைஒளி முகநூல் இணையத்தளம் மற்றும் ஐ.பி. ரிவி ஊடாகவும் ஒளிபரப்பாகும் என்பதால், நீங்கள் வீட்டிலிருந்தவாறே இத்திருப்பலிகளில் பங்குபற்றலாம்.

இந்த இரு திருப்பலிகளுக்கும், ஆலயத்திற்குள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த நேரலை ஒளிபரப்பிற்கு உதவ விரும்புவோர், எமது அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம். உங்களது பெயர் விபரங்கள் திருப்பலியின் ஆரம்பத்திலும் முடிவிலும் அறிவிக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட வகையில், கட்டுப்பாடுகளுடன் கூடிய முறையில், பின்வரும் தினங்களில், குறிப்பிட்ட நேரங்களில், தனிப்பட்ட செபங்களுக்காக மட்டும் ஆலயம் திறக்கப்படும். ஆகக்கூடியதாக 10 பேர் மட்டுமே ஒரு நேரத்தில் ஆலயத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள்.

**திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை: காலை 11:00 - மதியம் 1:00 வரை**
- திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருக்கும்

**சனிக்கிழமை: மாலை 4:30 - மாலை 5:30 வரை**
**ஞாயிற்றுக்கிழமை: மதியம் 12:00 - மதியம் 2:00 வரை**
- திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருக்கும்
- திவ்விய நற்கருணை பெற்றுக்கொள்ளலாம்

அவசர தொடர்புகளுக்கு, கிழமை நாட்களில் காலை 9 மணியிலிருந்து மதியம் 12 மணிவரை, எமது அலுவலக தொலைபேசியில் அழைத்து பேசலாம் (416-264-6544).

இறை இயேசுவின் ஆசியும் வாழ்த்துக்களும் கூறி நிற்கும்,
உங்கள் பணியாளன்,


**அருட்பணி சாள்ஸ் கொலின்ஸ்**
**பங்குத்தந்தை, தூய ஆரோக்கிய அன்னை தமிழ்ப் பங்கு**

தொலைபேசி: 416-264-6544
மின்னஞ்சல்: office@olghtamilparish.com
இணையத்தளம்: www.olghtamilparish.com
முகநூல்: https://www.facebook.com/OLGHTamilParish
வலைஒளி: https://www.youtube.com/olghtamilparish